# பாடம் 1 : இன்பத்தமிழ்

வகுப்பு: VI

பாடம் : தமிழ்

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ஏற்றத் தாழ்வற்ற சமூகம் அமைய வேண்டும்,

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு அசதி ஆக இருக்கும்.

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

நிலவென்று

4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

தமிழெங்கள்

5. "அமுதென்று" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அமுது + என்று

5. 'செம்பயிர்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

செம்மை+ பயிர்

## ஆ. இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. விளைவுக்கு | - | பால் | 3 |
| 2. அறிவுக்கு | - | வேல் | 4 |
| 3, இளமைக்கு | - | நீர் | 1 |
| 4. புலவருக்கு | - | தோள் | 2 |

## இ. ஒத்த ஓசையில் மடியும் இயைபு சொற்களை எடுத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| பேர் | - | நேர் |
| நீர் | - | ஊர் |
| வான் | - | தேன் |
| தோள் | - | வாள் |

AAMSKOSAVAPATTY

## ஈ. குறுவினா

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?

பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள்

- அமுதம்,
- நிலவு,
- மணம் ஆகும்.

2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

தமிழின் பெருமை எல்லையற்றது. எனவே தமிழை நான் எல்லையற்ற வானத்தோடு ஒப்பிடுவேன்.

## உ. சிறுவினா

1. இன்பத் தமிழ் பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக?

“ இன்பத்தமிழ் " பாடலில் எனக்குப் பிடித்த இரண்டு அடிகள்

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்_இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்.

2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

- நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவன் வாக்கு.
- உலக உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்கு அடிப்படை ஆதாரம் நீர்.
- அத்தகைய நீர் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றங்கரையில் தான் நாகரீகம் வளர்ந்தது.
- இதுவே சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு ஆகும்.

## ஊ. சிந்தனை வினா

1. வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது. ?

- வேல் என்பது ஓர் ஆஆயுதம்.
- " வெல் " என்பதிலிருந்து" வேல் "என்னும் சொல் வந்தது.

AAMSKOSAVAPATTY

- வேல் என்பதற்கு ஞானத்தின் அடையாளம் என்று பொருள்.
- அறிவானது கூர்மை, அகலம், ஆழம், ஆகிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- புலவர்கள் தகுந்த சொற்களைத் தக்க இடத்தில் பயன்படுத்தும் போது பெருமை அடைவர்.

எனவே, தமிழ் மொழியானது நல்ல புகழ் மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்று விளங்குகிறது.

## செய்யுள் -1. தமிழ்க்கும்மி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக,

1. தாய் மொழியில் படித்தால் மேன்மை_அடையலாம்.
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் மேதினி_சுருங்கிவிட்டது.
3. "செந்தமிழ் " என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

செம்மை + தமிழ்

4. "பொய்யகற்றும்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

பொய் + அகற்றும்

5. பாட்டு + இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

பாட்டிருக்கும்

6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

எட்டுத்திசை

### ஆ. நயம் உணர்ந்து எழுதுக.

1. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனை சொற்களை எடுத்து எழுதுக.

AAMSKOSAVAPAI

எட்டு - எட்டிடவே

ஊழி - ஊற்றெனும்

2. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகை சொற்களை எடுத்து எழுதுக.

ஆழி - அழியாமலே

பொய் - மெய்

3. பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபு சொற்களை எடுத்து எழுதுக.

பெரும் - முற்றும்

பாட்டிருக்கும் - காட்டிருக்கும்

SAVAPATTY

## இ. குறுவினா

1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

- தமிழ் மொழி பொய்யை அகற்றும்.
- மனதில் உள்ள அறியாமையை நீக்கும்.
- தமிழ் மொழி அன்புடையவர்களின் இன்பம் தரும் பாட்டில் நிறைந்து இருக்கும்
- உயிர் போன்ற உண்மையை ஊட்டும்.
- உயர்ந்த அறத்தைத் தரும்.
- உலகம் சிறந்து வாழ்வதற்கான வழி காட்டும் முறைகளைக் கொண்டு இருக்கும்.

போன்றவற்றை தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுகிறார்.

2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

- செந்தமிழின் புகழ் உலகின் எட்டுத் திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

## ஈ. சிறுவினா

1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?

- தமிழ் மொழி பலநூறு ஆண்டுகளைக் கண்டது.
- பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்து இருக்கிறது.
- தமிழ் மொழி அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகிறது.
- எனவே காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுகிறார்.

2. தமிழ்க் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.

- செந்தமிழின் புகழ் உலகின் எட்டுத்திசைகளிலும் பரவ வேண்டும்.
- தமிழ் மொழி பல நூறு ஆண்டுகளைக் கண்டது
- தமிழ் மொழி அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகிறது.
- பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்து இருக்கிறது.
- தமிழ் மொழி பொய்யை அகற்றும்.
- மனதில் உள்ள அறியாமையை நீக்கும்.

AAMSKOSAVAPATTY

- தமிழ் மொழி அன்புடையவர்களின் இன்பம் தரும் பாட்டில் நிறைந்து இருக்கும்.
- உயிர் போன்ற உண்மையை ஊட்டும்.
- உயர்ந்த அறத்தைத் தரும்.

**உ. சிந்தனை வினா.**

1. தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?
   - தமிழ் மொழி அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்டு உள்ளது.
   - அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் தமிழில் நிறைந்து உள்ளன.
   - உயர்ந்த உண்மையைக் கூறும் அற நூல்கள் தமிழில் உண்டு. இவற்றைக் கற்பதால் தமிழ்மொழி மக்களது அறியாமையை அகற்றும்.

## 1. உரைநடை - வளர்தமிழ்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. " தொன்மை" என்னும் சொல்லின் பொருள் _பழமை
2. "இடப்புறம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது இடம் + புறம்
3. "சீரிளமை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது சீர் + இளமை
4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் சிலப்பதிகாரம்

AAMS KOSAVAPATTY

5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் கணினித்தமிழ்

6. “தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர் பாரதியார்

7. “மா” என்னும் சொல்லின் பொருள் விலங்கு

## ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது மொழி
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் தொல்காப்பியம்
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது எண்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

## இ. சொற்களைச் சொந்த தொடரில் அமைத்து எழுதுக.

1. தனிச்சிறப்பு - தமிழ்மொழி தனிச்சிறப்பு உடையது.
2. நாள்தோறும் - நான் நாள்தோறும் விளையாடுவேன்.

## ஈ. குறுவினாக்கள்

1. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?

- சாலைகள் தோன்றிய பிறகே சாலை விதிகள் தோன்றி இருக்கும்.
- அதுபோல இலக்கியம் தோன்றிய பிறகே அதற்கு உரிய இலக்கண விதிகள் தோன்றி இருக்க வேண்டும்.
- தமிழில் கிடைத்துள்ள பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்.
- அப்படி என்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்து இருக்க வேண்டும்.

AAMSKOSAVAPATTY

❖ இதனைக் கொண்டு தமிழ் மிகவும் தொன்மையான மூத்த மொழி என்பதை உணரலாம்.

2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்கள் பெயர்களை எழுதுக.

தமிழ் காப்பியங்களின் பெயர்கள் :

❖ சிலப்பதிகாரம்

❖ மணிமேகலை

❖ சீவகசிந்தாமணி

❖ வளையாபதி

❖ குண்டலகேசி

## உ. சிறுவினாக்கள்

1. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருட் சிறப்பு யாது?

அஃறிணை :

❖ உயர்திணைக்கு எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல்+திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயர் இட்டனர் நம் முன்னோர்.

பாகற்காய் :

❖ கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு இல்லாத காய் பாகற்காய் (பாகு+அல்+காய்) என வழங்கினர்.

2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.

❖ தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.

❖ பல மொழிகள் கற்ற கவிஞராகிய பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் " என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

AAMS KOSAVAPATTY

- இதற்குக் காரணம், ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை ஆகியன தமிழில் அமைந்து இருப்பதே ஆகும்.

3. தமிழ் மொழியின் சிறப்புக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

தமிழ் மொழியின் சிறப்பு :

- செம்மை மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகச் சில மொழிகளுள் தமிழும் ஒன்று.
- தமிழ் மொழி மிகத் தொன்மையான மொழி.
- தமிழ் மொழி பேசவும், எழுதவும், படிக்கவும் எளிதாக அமைந்துள்ளது.
- தமிழ் மொழி சொல் வளம் மிக்கது.
- தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயர் உண்டு.
- இயல் தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும்.
- இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும்.
- நாடகத் தமிழ் உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்.

ஊ. சிந்தனை வினாக்கள்

1. தமிழ் மொழி எழுதவும் படிக்கவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?

- தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது.
- மெய்யோடு உயிர் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள்
- உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துக்களை எளிதாக ஒலிக்கலாம்.
- எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்து விடும். எ. கா: அ+மு+து = அமுது

AAMS KOSAVAPATTY

- தமிழ் மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்பத் தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன
- எ.கா: வலஞ்சுழி எழுத்துகள் - அ, எ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்துகள் - ட, ய, ழ

2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.

- தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதியவையாக வருகின்றன.
- அவற்றுள் துளிப்பா,புதுக்கவிதை போன்றவை தமிழ்க் கவிதை வடிவங்கள் :புதினம், சிறுகதை போன்றவை உரைநடை வடிவங்கள்.
- இப்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் கிளைவிட்டுத் தமிழ் வளர்ந்து கொண்டே வருகிறது.
- இன்றைய அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.
- இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை எடுத்துக்காட்டிக் கூறலாம்.
- மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எண்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.
- நம் இலக்கண நூல்கள் படிப்பதற்காக எழுதப்பட்டவை. ஆயினும் அவை கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தையும் பெற்று உள்ளன.
- எனவே தமிழ் மொழி வளர்மொழி என்பதை நன்கு உணர முடிகிறது.

AAMSKOSAVAPATTY

## துணைப்பாடம் - கனவு பலித்தது.

**அ. அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

**இன்சுவை:**

ஆறாம் வகுப்பு படிக்கும் போது அறிவியல் துறையில் பணியாற்றவேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தாள். அவ்விருப்பம் நிறைவேறியது. அவள் சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் இளம் ஆராய்ச்சியாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.
இன்சுவை அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் படித்ததனால் தன் இலக்கை அடைவது கடினமானது என எண்ணினாள். ஆனால் அவளுடைய அத்தையின் ஊக்குவிப்பினால் தன் இலக்கை அடைந்தாள்.

**சாதனையாளர்கள்:**

சாதனை புரிவதற்கு மொழி தடை இல்லை. கணிதமேதை இராமானுஜம், மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர் சிவன், இஸ்ரோ அறிவியல் அறிஞர் வளர்மதி போன்றோர் தம் தாய்மொழித் தமிழில் பயின்ற சாதனையாளர்களாவர்.

**தமிழர்களின் அறிவியல் சிந்தனை:**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்ததுதான் உலகம் என்பது அறிவியல் உண்மை , இக்கருத்தினைத் தொல்காப்பியரும் தமது தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார் . "நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின் " மேலும், உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியுள்ளார்.

AAMS KOSAVAPATTY

**இலக்கியங்கள் கூறும் சான்றுகள்:**

கடல் நீர் ஆவியாகி மேகமாகிப் பின்னர் குளிர்ந்து மழையாகப் பொழியும் என்ற அறிவியல் உண்மையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவை

**கார் நாற்பது:**

"கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி"

**அறுவை மருத்துவம்:**

போரில் புண்பட்ட வீரரின் மார்பை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. "நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு " சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தி நற்றிணை என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

**கபிலர் - கலீலியோ கருத்து:**

புல்லின் நுனியில் நிற்கும் பனிதுளியில் நெடுந்தொலைவில் நிற்கும் பனைமரம், முழுமையாகத் தெரியும் காட்சியைத் திருவள்ளுவமாலைப் பாடலில் விளக்கியுள்ளார்

ஒளியைக் கோட்டம் அடையச் செய்து தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்று பிற்காலத்தில் கலீலியோ நிறுவியுள்ளார்.

## இலக்கணம் - தமிழ் எழுத்துகளின் வகை தொகை

**அ. கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.**

1, உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் இலை

2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல் பூ

3. ஆய்த எழுத்த இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் எஃகு

AAMSKOSAVAPATTY

## ஆ. குறுவினாக்கள்

1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?.

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்.

2. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.

1. வல்லினம் _க், ச், ட், த், ப், ற்.
2 மெல்லினம்_ங், ஞ், ண், ந், ம், ன்.
3. இடையினம்_ய், ர், ல், வ், ழ், ள்.

3. தமிழ் எழுத்துக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.

உயிர்க்குறில், உயிர் மெய் குறில் கால அளவு - 1 மாத்திரை

உயிர் நெடில், உயிர் மெய் நெடில் கால அளவு - 2 மாத்திரை

மெய்யெழுத்துக்கள், ஆய்த எழுத்து கால அளவு - 1/2 மாத்திரை .

# மொழியை ஆள்வோம்

## அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு _____ சொல்வது

அ) விரிவாகச்   ஆ) சுருங்கச்   இ) பழைமையைச்   ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது சுத்தம்

3. உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை.

4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?

உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம்.

5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக. சுத்தம் சோறு போடும்.

## ஆ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

1. எங்க ஸ்கூலே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க,

எங்கள் பள்ளியில் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்கிறார்கள்.

2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

பெற்றோரிடம் அனுமதிக் கடிதம் வாங்கி வரச் சொன்னார்கள்.

## இ. ஆய்ந்தறிக.

பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.

S. இனியன், எஸ். இனியன், ச. இனியன் - இவற்றுள் சரியானது எது? ஏன்?

விடை : ச. இனியன்

காரணம்: பெயரின் தலைப்பெழுத்து தமிழ் எழுத்தாகத்தான் அமைய வேண்டும்.

## ஈ. கடிதம் எழுதுக.

1. விடுப்பு விண்ணப்பம்

அனுப்புநர்

த. கலா

ஆறாம் வகுப்பு, அ-பிரிவு,

அக்சயா அகாடமி பதின்ம மேல்நிலைப்பள்ளி,

கொசவபட்டி.

பெறுநர்

வகுப்பாசிரியர் அவர்கள்,

அக்சயா அகாடமி பதின்ம மேல்நிலைப்பள்ளி,

கொசவபட்டி.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். நான் கோவிலுக்குச் செல்ல இருப்பதால் இன்று ஒரு நாள் [15-09-2020] மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள,

இடம்: கொசவபட்டி, த. கலா

நாள்: 15-09-2020.

## மொழியோடு விளையாடு

### அ. திரட்டுக

'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.

விடை: பழமை, இளமை, வளமை, புதுமை, மேன்மை, வெண்மை

### ஆ. சொல் வளம் பெறுவோம்

1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

கரும்பு - கரு, கம்பு

கவிதை - கவி, தை, விதை, கதை

பதிற்றுப்பத்து - பதி, பற்று, பத்து

பரிபாடல் - பரி, பாடல், பாரி, பால், பா

2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் | மொழி | கோல் | மீன் | நீதி | எழுது |
| கண் | வெளி | தமிழ் | மணி | மாலை | விண் |

விடை: விண்மீன், நூல்வெளி, தமிழ்மொழி, எழுதுகோல், மீன்கண், நீதிநூல், கண்மணி, மணிமாலை, விண்வெளி, தமிழ் மாலை, தமிழ் நூல்.

இ. பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.

அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, அன்பு.

அ - அன்பு தருவது தமிழ்

ஆ - ஆற்றல் தருவது தமிழ்

இ - இன்பம் தருவது தமிழ்

ஈ - ஈடு இல்லாதது தமிழ்

உ - உணர்ச்சி தருவது தமிழ்

ஊ - ஊக்கம் தருவது தமிழ்ழ்

எ - என்றும் வேண்டும் தமிழ்

ஏ - ஏற்றம் தருவது தமிழ்ழ்

ஈ. கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டபிடிக்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | க |
| ர | ம் | தா | ர | சு | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | பா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

1. பாரதியார்
2. பாரதிதாசன்
3. சுரதா
4. ஔவையார்
5. திருவள்ளுவர்

AAMS KOS... ...TY